විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

මාලිගාවත්ත කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10. Maligawatte Secretariat, Maligawatte, Colombo 10.

අංකය / இல. / No. ஓய்வூ/சுநிரு/2009 දිනය / திகதி / Date 2009.08.

ஓய்வூதிய சுற்றுநிரூபம் 15/2009

சகல அமைச்சு செயலாளர்கள்,
மாகாண சபை பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள்/பிரதேச செயலாளர்கள்.

## இளைப்பாறிய அரச அலுவலர்களை மீள் நியமனம் செய்தல் மற்றும் ஓய்வூதியங்களை மீளாய்வு செய்தல்

> "இளைப்பாறிய அரச அலுவலரொருவர் சேவை முறிவின் பின் ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றில் மீள்நியமனம் செய்யப்பட்டு அச்சேவையில் அமர்த்தப்பட்ட பதவியிலிருந்து ஓய்வு பெறுகையில் அத்தினத்திலுள்ளவாறான மீளாய்வு செய்யப்பட்ட சம்பளத்தின் அடிப்படையில் உத்தேச ரீதியில் அவரது ஓய்வூதியம் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்".

இதன்படி ஓய்வூதிய பிரமாணக் குறிப்புகளின் 2 அ ஆ பிரிவின் மேற்படி துணை ஏற்பாட்டின் படி இளைப்பாறிய அரச அலுவலர்கள் மீள் நியமனம் செய்யப்படும் போது அவர்களின் ஓய்வூதியத்தை மீளாய்வு செய்து கொள்ள முடியும். பொது நிருவாக சுற்றறிக்கை 9/2007 ஏற்பாடுகளின் படி மீள் நியமனம் செய்யப்படும் ஓய்வூதிய அலுவலர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவு மற்றும் ஏனைய வசதிகள் தீர்மாணிக்கப்பட்டுள்ளன. அதன்படி அவ்வலுவலர்களுக்கு ஏதேனுமொரு மாதாந்த கொடுப்பனவை அல்லது இறுதியாக பெற்ற சம்பளத்தின் 50% இற்கு சமனான கொடுப்பனவை மட்டுமே வழங்க முடியும். எவ்வாறிருப்பினும் ஓய்வூதியத்தினை மீளாய்வு செய்யும் போது அவர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவை அல்லது சம்பள வீதத்தினை கவனத்தில் கொள்ளாது உரிய பதவிக்கு உரித்தாக்கப்பட வேண்டிய உத்தேச சம்பளத்தின் அடிப்படையில் ஓய்வூதியத்தினை மீளாய்வு செய்ய முடியும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ் ஓய்வூதிய மீளாய்வின் போது கீழ் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

1. ஓய்வூதிய பிரமாணக் குறிப்புகளின் 2 அ ஆ பிரிவின் படி மீள் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய படிவம் (இணைக்கப்பட்டுள்ளது).
2. திருத்திய சம்பள அறிக்கை மற்றும் சம்பள மீளாய்வு கடிதங்கள்.
3. மீள் நியமனத்துக்குரிய நியமனக் கடிதம்.
4. அச்சேவையை முடிவுறுத்தும் கடிதம்.

கே.ஏ.திலகரத்ன,
ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள் :-
1. செயலாளர், பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு
2. செயலாளர், நிதி அமைச்சு
3. கணக்காய்வாளர் நாயகம்


| | Telephone | Fax | | Telephone | Fax | | Telephone |
|---|---|---|---|---|---|---|---|
| Director General | 2431647 | 2342078 | W&OP | 2332346 | 2432214 | Policy | 2329580 |
| Director | 2432008 | 2342078 | PSPF | 2324375 | 2332347 | Forces | 2320439 |
| Director (F) | 2434974 | 2391403 | L.G.U. | 2342525 | 2342525 | Computation | 2434414 |
| Internal Auditor | 2329634 | 2329634 | Registration | 2329178 | - | Payments | 2431612 |

E-mail: pensions@sltnet.lk
Web site: www.pensions.gov.lk

## ஓய்வூதிய பிரமாணக் குறிப்புகளின் 2 'அ'(ஆ) பிரிவின்படி மீள்நியமனம் செய்யப்பட்ட அரச அலுவலர்கள் தொடர்பில் முன்வைக்கப்பட வேண்டிய விபரங்கள்

1. பெயர் மற்றும் முகவரி :-

2. ஓய்வூதிய இலக்கம் :-

3. வங்கி பெயரும் கணக்கு இலக்கமும் :-

4. வகித்த ஓய்வூதிய உரித்துடைய பதவி :-

5. மீள் நியமனம் செய்யப்பட்ட திகதி :-

6. மீள் நியமனக் காலத்துக்குள் வகித்த ஓய்வூதிய உரித்துடைய பதவி :-

7. மீள் நியமனம் செய்யப்பட்ட காலம் :-

8. மீள்நியமனக் காலத்துக்குள் சம்பளம் வழங்கப்பட்ட மூலம் (தனிநபர் சம்பளம், முற்பண கணக்கு போன்றவை) :-

9. மீள்நியமனப் பதவி முடிவுறுத்தப்பட்ட திகதி :-

10. பொது நிருவாக சுற்றறிக்கை இல 15/2003 இன்படி உரிய சம்பளமும் சம்பள அளவுத் திட்டமும். :-

11. பொதுநிருவாக சுற்றறிக்கை இல 9/2004 இன்படி உரிய சம்பளமும் சம்பள அளவு திட்டமும் :-

12. பொது நிருவாக சுற்றறிக்கை இல 6/2006 இன்படி உரிய சம்பளமும் சம்பள அளவு திட்டமும் :-

13. பொது நிருவாக சுற்றறிக்கை இல 9/2007 இன்படி உரிய சம்பளமும் சம்பள அளவு திட்டமும் :-

14. மீள இளைப்பாறச் செய்த திகதிக்குரிய சம்பள அளவுத் திட்டமும் ஓய்வூதிய கணிப்பீட்டுக்குரிய உத்தேச சம்பளமும் :-

இவ்வலுவலகத்திலுள்ள பதிவேடுகளின் படி மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும், மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் மீள் நியமன அடிப்படையில் ...................... ஆந் திகதி முதல் ...................... ஆந் திகதி வரை சேவையாற்றியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

(பொது நிருவாக சுற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வு பெற்று ஆறு மாதகால மேலதிக பணிக்கொடையைப் பெற்ற 55 வயதுக்குட்பட்டவர்களுக்கு இத்திருத்தம் ஏற்புடையதாகாது)

..........................................................

உறுதிப்படுத்தும் அலுவலரின்
பெயரும் பதவியும்

திகதி :- ......................

க.வே :-

03. இப்படிவம் உரிய அமைச்சு / திணைக்களத் தலைவரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டுமேயன்றி மீள் நியமன சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலரினால் அல்ல.

04. சம்பள மீளாய்வின் உறுதி செய்யப்பட்ட பிரதியொன்றை விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும்.